# Group 2 2A Syllabus Topic Wise Revision Test

## Development Administration in Tamil Nadu Revision Test Part 1 in Tamil

**Portion: அலகு – IX: தமிழகத்தில் வளர்ச்சி நிர்வாகம்: தமிழ்நாட்டின் மனிதவள மேம்பாட்டுக் குறியீடுகளும் அவற்றை தேசிய மற்றும் பிற மாநிலங்களுக்கான குறியீடுகளுடன் ஒப்பாய்வும் – தமிழகத்தின் சமூக பொருளாதார வளர்ச்சிக்கு சமூக மறுமலர்ச்சி இயக்கங்களின் பங்களிப்பு.**

1) தமிழ்நாட்டின் கல்வியறிவு வீதம் தென்மாநிலங்களில் எத்தனையாவது இடத்தைப் பெற்றுள்ளது?

A. 1
B. 2
C. 3
D. 4

விளக்கம்: B) 2

தமிழ்நாட்டின் கல்வியறிவு வீதம் (80.09%) தேசிய சராசரியை விட (74.04%) அதிகமாக உள்ளது. தமிழ்நாட்டில் உயர்கல்விக்கான சேர்க்கையானது (44.3%) இந்தியாவின் உயர்கல்வி சேர்க்கையை (24.5%) விட உயர்ந்ததாகும்.

2) கீழ்க்கண்டவற்றுள் நாட்டின் மேம்பாட்டை அளவிடும் சிறந்த குறியீடு எது?

A. நிகர நாட்டு உற்பத்தி
B. வாங்கும் திறன் சமநிலை
C. தனிநபர் வருமானம்
D. மனிதவள மேம்பாட்டு குறியீடு

விளக்கம்: C) தனிநபர் வருமானம்

பொருளாதார மேம்பாடு என்பது மக்களின் வாழ்க்கைத் தரத்தையும், நிலையான வளர்ச்சியையும் குறிக்கிறது. மேற்கண்ட நான்கும் பொருளாதார முன்னேற்றத்தின் முதன்மையான குறியீடுகள் ஆகும்.

3) வாங்கும் திறன் சமநிலை அடிப்படையில் இந்தியா எந்த இடத்தைப் பெற்றுள்ளது?

A. 3
B. 4
C. 6
D. 8

விளக்கம்: A) 3

வாங்கும் திறன் சமநிலை என்பது ஒரு நாட்டினுடைய நாணயங்களின் எண்ணிக்கைக்கு இணையாக, ஒரு சந்தையில் அமெரிக்க டாலரில் வாங்குவதற்கு ஏற்றவாறு, உள்நாட்டு சந்தையில் அதே அளவிலான

பொருட்களையும் வாங்குவதற்கு தேவைப்படும் அளவாகும். மேலும் இதில் சீனா முதலிடத்திலும், ஐக்கிய அமெரிக்க நாடுகள் இரண்டாம் இடத்திலும் உள்ளன.

4) 2015 ஆம் ஆண்டின் படி இந்தியாவின் மனித வள மேம்பாட்டு குறியீட்டின் அளவு ___?

A. 0.826

B. 0.535

C. 0.342

D. 0.624

விளக்கம்: D. 0.624

மனிதவள மேம்பாடு என்பது மனிதனின் உடல் திறன் மற்றும் சுகாதார திறன்களை கல்வியின் மூலம் மேம்படுத்துவது ஆகும். ஐக்கிய நாடுகளின் வளர்ச்சி திட்டத்தால் உலகின் மனித வளர்ச்சி அறிக்கை தயாரிக்கப்பட்டு வெளியிடப்படுகிறது.

5) 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி தமிழகத்தின் பாலின விகிதம் எவ்வளவு?

A. 996

B. 985

C. 976

D. 972

விளக்கம்: A. 996

பாலின விகிதம் என்பது 1000 ஆண்களுக்கு தலா பெண்களின் எண்ணிக்கை ஆகும். இந்தியாவின் பாலின விகிதம் 943 ஆகும். இந்தியாவில் அதிக பாலின விகிதத்தை கொண்டுள்ள மாநிலம் கேரளா (1084) ஆகும்.

6) தமிழகத்தில் 2017 ஆம் ஆண்டு ஜூலை 31 ஆம் நாள் வரை நிறுவப்பட்ட சூரிய அமைப்புகளின் மூலம் பெற்ற மின் திறன் எவ்வளவு?

A. 2345 மெகாவாட்

B. 3797 மெகாவாட்

C. 1697 மெகாவாட்

D. 1345 மெகாவாட்

விளக்கம்: C. 1697 மெகாவாட்

தமிழ்நாடு அதிக அளவில் சூரிய மின்தகடு அமைப்பு கொண்ட மாநிலமாக உள்ளது. இந்தியாவில் சூரிய சக்தி மூலம் அதிக மின்சாரம் உற்பத்தி செய்யும் மாநிலங்களில் தமிழகம் முன்னிலையில் உள்ளது.

7) வளர்ச்சிப் பாதையை பொருத்தவரை எந்த மூன்று மாநிலங்களுக்கு பொதுவான ஒற்றுமைகள் இருப்பதாக அமர்த்தியா சென் குறிப்பிடுகிறார்?

A. தமிழ்நாடு, கர்நாடகா, கேரளா

B. தமிழ்நாடு, கேரளா, இமாச்சலப் பிரதேசம்

C. கேரளா, ஆந்திர பிரதேசம், கர்நாடகா

D. ஆந்திர பிரதேசம், மத்திய பிரதேசம், கர்நாடகா

விளக்கம்: B. தமிழ்நாடு, கேரளா, இமாச்சலப் பிரதேசம்

மனித திறன்களை பயன்படுத்தாமல் இந்த விரைவான பொருளாதார வளர்ச்சியை எட்ட முயன்ற பெரும்பாலான இந்திய மாநிலங்களை விட மனித திறன்களை பயன்படுத்திய மேற்கண்ட மூன்று மாநிலங்களிலும் தனிநபர் வருமானம் அதிகம் என An Uncertain Glory என்ற புத்தகத்தில் நோபல் பரிசு பெற்ற அறிஞர் அமர்த்தியா சென் குறிப்பிடுகிறார்.

8) 2018 ஆம் ஆண்டு அறிக்கையின் படி G-8 நாடுகளில் அதிக மொத்த உள்நாட்டு உற்பத்தியை கொண்டுள்ள நாடு எது?

A. ரஷ்யா

B. இங்கிலாந்து

C. கனடா

D. அமெரிக்க ஐக்கிய நாடுகள்

விளக்கம்: D. அமெரிக்க ஐக்கிய நாடுகள்

ஓராண்டில் நாட்டின் புவியியல் எல்லைக்குள் குறிப்பிட்ட காலத்திற்குள் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் மற்றும் பணிகளின் மொத்த மதிப்பு மொத்த உள்நாட்டு உற்பத்தி ஆகும். 2018 ஆண்டு இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பு சுமார் 2.72 ட்ரில்லியன் அமெரிக்க டாலர்கள் ஆகும்.

9) கீழ்கண்டவற்றுள் பிரிக்ஸ் நாடுகளின் கூட்டமைப்பில் இல்லாத நாடு எது?

A. பூட்டான்

B. பிரேசில்

C. சீனா

D. தென் ஆப்பிரிக்கா

விளக்கம்: A. பூட்டான்

BRIC என முதலில் 2006ம் ஆண்டு நிறுவப்பட்டது. 2010ஆம் ஆண்டு தென் ஆப்பிரிக்கா நாடும் இணைந்து கொண்டதால் BRICS என அழைக்கப்படுகிறது. பிரிக்ஸ் நாடுகளின் ஜிடிபி உலகநாடுகளில் 30% கொண்டது. பிரிக்ஸ் நாடுகளில் அதிக ஜிடிபி கொண்ட நாடு ரஷ்யா ஆகும்.

10) உலக வங்கியின் அறிக்கை படி குறைந்த வருவாய் கொண்ட நாடு எவ்வளவு அமெரிக்க டாலருக்கும் குறைவான வருவாயை கொண்டதாக இருக்க வேண்டும்?

A. <950

B. <990

C. <1005

D. <1210

விளக்கம்: C. <1005

உலக வங்கி அறிக்கையின்படி

i) குறைந்த நடுத்தர வருவாய் நாடுகள் – 1006 – 3955 ( அமெரிக்க டாலர்கள் )

ii) உயர்தர நடுத்தர வருவாய் நாடுகள் – 3956 – 12, 235 ( அமெரிக்க டாலர்கள் )

iii) உயர்ந்த வருவாய் நாடுகள் – 12, 235 கும் அதிகமாக வருமானம் ஈட்ட வேண்டும் என வகைப்படுத்தி உள்ளது.

11) 2015 ஆம் ஆண்டு கணக்கின் படி கீழ்கண்ட நாடுகளில் அதிக மனிதவள மேம்பாட்டு குறியீடு பெற்ற நாடு எது?

A. இலங்கை

B. ரஷ்யா

C. இந்தியா

D. சீனா

விளக்கம்: B. ரஷ்யா

இந்தியாவில் மனித வளங்களின் வளர்ச்சிக்கு மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் பொறுப்பாகும். இதன் தலைமையகம் புதுடில்லி சாஸ்திரி பவனில் அமைந்துள்ளது. மனித வளர்ச்சி குறியீடு என்பது சமூகத்தின் மக்கள் அனைவரின் ஒட்டுமொத்த மேம்பாட்டை குறிக்கிறது.

12) அனல் மின் நிலையம் சுற்றுச்சூழலை மாசுபடுத்தும் அதிக அளவு ____ வாயுவை வெளியிடுகிறது.

A. கார்பன் மோனாக்சைடு

B. கார்பன் டை ஆக்சைடு

C. சல்பர் டை ஆக்சைடு

D. மீத்தேன்

விளக்கம்: B. கார்பன் டை ஆக்சைடு

இந்தியாவின் மின்சாரத் தேவைகளை பூர்த்தி செய்ய அனல் மற்றும் புனல் மின்சார நிலையங்களை சார்ந்திருக்கிறது. இந்த இரண்டு உற்பத்தி நிலையங்களும் பாதகமான சுற்றுச்சூழல் தாக்கத்தைக் கொண்டுள்ளன.

13) உலக மக்கள் தொகையில் இந்தியாவின் மக்கள்தொகை சதவீதம் எவ்வளவு?

A. 14.5%

B. 15.6%

C. 16.3%

D. 17.5%

விளக்கம்: D. 17.5%

winmeen.com

இந்திய மக்கள்தொகை விகிதம் அதன் பரப்பு விகிதத்தை விட மிக அதிகமாக உள்ளது. உலகில் உள்ள 6 நபர்களில் ஒருவர் இந்தியராக உள்ளார்.

14) இந்தியாவில் முழுமையான மக்கள் தொகை கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்ட ஆண்டு எது?

A. 1872
B. 1876
C. 1881
D. 1886

விளக்கம்: C. 1881

இந்தியாவின் முதல் மக்கள் தொகை கணக்கெடுப்பு 1872 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டது. நாட்டின் 15வது மக்கள் தொகை கணக்கெடுப்பு 2011 ஆம் ஆண்டு நடைபெற்றது.

15) கீழ்க்கண்ட மாநிலங்களை மக்கள்தொகை அடிப்படையில் ஏறு வரிசைப்படுத்துக.

1) ஆந்திர பிரதேசம்
2) மேற்கு வங்காளம்
3) பீகார்
4) மகாராஷ்டிரம்
5) உத்தரப் பிரதேசம்

A. 1-2-3-4-5
B. 2-1-4-3-5
C. 4-1-2-5-3
D. 3-4-5-1-2

விளக்கம்: A. 1-2-3-4-5

இந்தியாவில் அதிக மக்கள் தொகையை கொண்ட மாநிலமாக உத்தரப் பிரதேசமும், இரண்டாவது இடத்தில் மகாராஷ்டிராமும் உள்ளது. புதுடெல்லி 16.75 மில்லியன் மக்கள் தொகையுடன் யூனியன் பிரதேசங்கள் இடையே முதலிடம் வகிக்கிறது

16) இந்தியாவில் மிகக் குறைந்த மக்கள் தொகை கொண்ட மாநிலம் எது?

A. சிக்கிம்
B. பீகார்
C. மணிப்பூர்
D. திரிபுரா

விளக்கம்: A. சிக்கிம்

சிக்கிமின் மக்கள்தொகை 0.61 மில்லியன் ஆகும்.

17) 2011 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி மக்கள் அடர்த்தி குறைவாக கொண்ட மாநிலம் எது?

A. பீகார்

B. அருணாச்சல பிரதேசம்

C. மேகாலயா

D. மணிப்பூர்

விளக்கம்: B. அருணாச்சலப் பிரதேசம்

2011 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி இந்தியாவின் சராசரி மக்கள் அடர்த்தி ஒரு சதுர கிலோ மீட்டருக்கு 382 ஆகும். உலகின் மக்கள் அடர்த்தி மிகுந்த பத்து நாடுகளில் இந்தியாவும் ஒன்று. இந்தியாவில் மிக அதிக மக்கள் தொகை கொண்ட மாநிலம் பீகார்(1106 பேர்/ச.கிமீ).

18) அந்தமான் நிகோபார் தீவின் மக்களடர்த்தி எவ்வளவு?

A. 230 பேர்/ச.கிமீ

B. 180 பேர்/ச.கிமீ

C. 88 பேர்/ச.கிமீ

D. 46 பேர்/ச.கிமீ

விளக்கம்: D. 46

யூனியன் பிரதேசங்களில் புதுடெல்லி 11320 பேர்/ச.கிமீ என்ற அளவில் அதிக மக்கள் அடர்த்தியை கொண்டதாகவும், அந்தமான் நிக்கோபார் தீவுகள் குறைந்த மக்கள் அடர்த்தியை கொண்டதாகவும் உள்ளது.

19) மக்களியல் வரலாற்றில் பெரும் மக்களியல் ஆண்டு என அழைக்கப்பட்ட நாடு எது?

A. 1921

B. 1923

C. 1927

D. 1931

விளக்கம்: A. 1921

1921 ஆம் ஆண்டு மக்கள்தொகை எதிர்மறை வளர்ச்சி விகிதமாக ( -0.31 % ) பதிவாகியுள்ளது. இது இந்திய மக்கள்தொகை வரலாற்றில் ஒரு முறை மட்டுமே ஏற்பட்ட நிகழ்வாகும்.

20) எந்த ஆண்டு மக்கள் தொகை வெடிப்பு ஆண்டு என்று அழைக்கப்படுகிறது?

A. 1972

B. 1979

C. 1981

D. 1986

விளக்கம்: C. 1981

இந்தியாவின் மக்கள் தொகை வளர்ச்சியை மூன்றாவது 30 ஆண்டுகளில் ( 1951-1981 ) 1951 ல் 361 மில்லியனாக இருந்த மக்கள் தொகை 1981 இல் 683 மில்லியன் வளர்ச்சி பெற்று முந்தைய கால வளர்ச்சி விகிதத்தில் இரட்டிப்பு வளர்ச்சி விகிதத்தை எட்டியதால் 1981 ஆம் ஆண்டு மக்கள் தொகை வெடிப்பு ஆண்டு என்று அழைக்கப்படுகிறது.

21) இந்தியாவில் 15 வயதிற்கும் குறைவானவர்கள் எத்தனை சதவீதம் பேர் உள்ளனர்?

A. 22.7%
B. 29.5%
C. 37.5%
D. 62.5%

விளக்கம்: B. 29.5%

இந்தியாவில் 60 வயதிற்கு மேற்பட்டவர்கள் 8 சதவீதம் பேர் உள்ளனர். ஆதலால் சார்ந்துள்ள மக்கள் தொகை மொத்த மக்கள்தொகையில் 37.5 சதவீதம் ஆக உள்ளது. மீதமுள்ள 62.5 சதவீதம் உழைக்கும் மக்கள் தொகையாக உள்ளது.

22) 2011 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி இந்தியாவின் எழுத்தறிவு விகிதம் எவ்வளவு?

A. 70.28%
B. 72.82%
C. 73.47%
D. 74.04%

விளக்கம்: D. 74.04%

இவற்றில் ஆண்களின் எழுத்தறிவு விகிதம் 82.14% ஆகவும் பெண்களின் எழுத்தறிவு விகிதம் 65.46% ஆகவும் உள்ளது. கேரளா 93.9 சதவீதம் பெற்று எழுத்தறிவில் இந்தியாவில் முதல் மாநிலமாகவும், பீகார் 63.82 சதவீதம் பெற்று குறைந்த எழுத்தறிவு பெற்ற மாநிலமாகவும் உள்ளது.

23) முதன்மை தொழிலாளர்கள் என அழைக்கப்படுபவர்கள் வருடத்தில் குறைந்தது எத்தனை மாதம் அல்லது நாட்கள் பணியாற்ற வேண்டும்?

A. 6 மாதம் அல்லது 183 நாட்கள்
B. 4 மாதம் அல்லது 120 நாட்கள்
C. 3 மாதம் அல்லது 180 நாட்கள்
D. 6 மாதம் அல்லது 150 நாட்கள்

விளக்கம்: A. 6 மாதம் அல்லது 183 நாட்கள்

தொழிலாளர்கள் மூன்று பிரிவுகளாக பிரிக்கப்படுகின்றன. அவை முதன்மை தொழிலாளர்கள், பகுதிநேர தொழிலாளர்கள் மற்றும் தொழிலாளர் அல்லாதோர். ஒரு ஆண்டில் ஆறு மாதங்களுக்கு குறைவாக வேலை செய்பவர்கள் பகுதிநேர தொழிலாளர்கள் எனவும் வேலை செய்யாத மக்கள் தொழிலாளர் அல்லாதோர் எனவும் அழைக்கப்படுகின்றனர்.

24) இந்தியாவில் வேலையில் பங்கேற்போர் விகிதம் ____.

A. 27.76%
B. 33.34%
C. 36.79%
D. 42.54%

விளக்கம்: C. 36.79%

இவற்றில் ஆண்கள் 53.25 சதவீதமும், பெண்கள் 25.51 சதவீதமும் உள்ளனர். மொத்த தொழிலாளர்களில் முதன்மை தொழிலாளர்கள் 75.23 சதவீதமும் மீதமுள்ள 24.77 சதவீதத்தினர் பகுதிநேர தொழிலாளர்களாகவும் உள்ளனர்.

25) இந்தியாவில் அதிக மக்கள் தொகையுடன் நகர் மயமாக்கப்பட்ட மாநிலங்களில் முதலிடத்தில் உள்ளது எது?

A. புதுடெல்லி

B. கோவா

C. மகாராஷ்டிரா

D. கேரளா

விளக்கம்: B. கோவா

இமாச்சலப் பிரதேசம் குறைந்த நகர மயமாக்கப்பட்ட பகுதியாக உள்ளது. யூனியன் பிரதேசங்களில் புதுடெல்லி மற்றும் சண்டிகர் மிகுந்த நகர மயமாக்கப்பட்ட பகுதிகளாக உள்ளன. பெரிய மாநிலங்களில் மிகுந்த நகர மயமாக்கப்பட்ட மாநிலங்களில் தமிழ்நாடு முதலிடம் வகிக்கிறது.

26) இந்தியாவில் உள்ள எத்தனை நகரங்களில் மக்கள் தொகை ஒரு மில்லியனுக்கும் அதிகமாக உள்ளது?

A. 23

B. 36

C. 42

D. 53

விளக்கம்: D. 53

இவை மில்லியன் நகரங்கள் என்று அழைக்கப்படுகின்றன. மெல்லிய நகரங்களுக்கு இடையில் மூன்று நகர்ப்புற குவியல்கள் தலா 10 மில்லியனுக்கு மேலான மக்கள் தொகையுடன் மெகா நகரங்கள் என அழைக்கப்படுகின்றன. அவை மும்பை, புதுடெல்லி மற்றும் கொல்கத்தா ஆகும்.

27) கீழ்கண்ட எந்த மூன்று அளவினை கொண்டு மனித வள மேம்பாடு அளவிடப்படுகிறது?

1) தொழில் 2) ஆரோக்கியம் 3) கல்வி 4) வருமானம்

A. 1, 2 & 3

B. 2, 3 & 4

C. 1, 3 & 4

D. மேற்கண்ட அனைத்தும்

விளக்கம்: B. 2, 3 & 4

1) ஆரோக்கியம்- பிறப்புக் காலத்தில்- சராசரி வாழ்நாள் மதிப்பீடு

2) கல்வி- பள்ளி செல்லும் குழந்தைகளின் படிப்பு காலம், வயதுவந்தோர் சராசரியாக பள்ளிகளில் கற்கும் காலம்

3) வருமானம் - நிகர தேசிய வருமானம் மற்றும் தனிநபர் வருமானம்

28) கீழ்கண்டவற்றுள் எது மிதமான மனிதவள மேம்பாட்டு அளவு என்று அழைக்கப்படுகிறது?

A. HDI – 0.253
B. HDI – 0.250 – 0.550
C. HDI – 0.550 – 0.699
D. HDI – 0.700 – 0.799

விளக்கம்: C. HDI – 0.550 – 0.699

வகைப்பாடு

HDI 0.550 குறைந்த மனிதவள மேம்பாடு

HDI 0.550 – 0.699 மிதமான மனிதவள மேம்பாடு

HDI 0.700 – 0.799 அதிக மனிதவள மேம்பாடு மற்றும்

HDI 0.800 அதற்கு மேல் மிக அதிக மனிதவள மேம்பாட்டை குறிக்கிறது.

29) இந்தியாவின் சாலை வலைப்பின்னல் உலக அளவில் எந்த இடத்தை பெற்றுள்ளது?

A. 1
B. 2
C. 3
D. 4

விளக்கம்: B. 2

2016ஆம் ஆண்டின் படி இந்தியா சுமார் 56,03, 293 கிலோமீட்டர் நீள சாலைகளைக் கொண்டதாக உள்ளது. இந்தியாவில் சுமார் 85 சதவீத பயணிகள், 75% சரக்கு போக்குவரத்து சாலைகள் மூலம் மேற்கொள்கிறார்கள்.

30) ஷெர்ஷா சூரி தன்னுடைய பேரரசை பலப்படுத்த ஏற்படுத்திய சாஹி அல்லது ராயல் சாலை கீழ்கண்ட எந்த பள்ளத்தாக்குகளை இணைக்கிறது?

A. சிந்து பள்ளத்தாக்கில் இருந்து சோனார் பள்ளத்தாக்கு வரை

B. காஷ்மீர் பள்ளத்தாக்கில் இருந்து நூப்ரா பள்ளத்தாக்கு வரை

C. ஜென்ஸ்கர் பள்ளத்தாக்கிலிருந்து காங்க்ரா பள்ளத்தாக்கு வரை

D. சோனார் பள்ளத்தாக்கிலிருந்து நூப்ரா பள்ளத்தாக்கு வரை

விளக்கம்: A. சிந்து பள்ளத்தாக்கில் இருந்து சோனார் பள்ளத்தாக்கு வரை

கொல்கத்தாவில் இருந்து பெஷாவர் வரை உள்ள சாலை ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் கிராண்ட் டிரங்க் சாலை என பெயர் மாற்றம் செய்யப்பட்டது. தற்போது இச்சாலை அமிர்தசரஸில் இருந்து கொல்கத்தா வரை நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது.

31) இந்தியாவில் குறைவான நீளமுடைய தேசிய நெடுஞ்சாலை எது?

A. NH27
B. NH37A
C. NH42

D. NH47A

விளக்கம்: D. NH47A

இது எர்ணாகுளத்தில் இருந்து ஆறு கிலோ மீட்டர் தொலைவிலுள்ள கொச்சின் துறைமுகத்தை( வில்லிங்டன் தீவு ) இணைகிறது.

32) இந்தியாவின் மிக நீளமான தேசிய நெடுஞ்சாலை கீழ்கண்ட எந்த இரு பகுதிகளை இணைக்கிறது?

A. ஜம்மு காஷ்மீரிலிருந்து கன்னியாகுமரி வரை

B. குஜராத்திலிருந்து அருணாச்சலப் பிரதேசம் வரை

C. புதுடெல்லியில் இருந்து பெங்களூரு வரை

D. வாரணாசியில் இருந்து கன்னியாகுமரி வரை

விளக்கம்: D. வாரணாசியில் இருந்து கன்னியாகுமரி வரை

இந்தியாவின் மிக நீளமான தேசிய நெடுஞ்சாலை NH7 ஆகும். இது 2369 கிலோமீட்டர் நீளம் கொண்டது.

33) எந்த ஆண்டு இந்தியாவின் தேசிய நெடுஞ்சாலை ஆணையம் நிறுவப்பட்டது?

A. 1995

B. 1997

C. 1992

D. 1994

விளக்கம்: A. 1995

இது தரைவழிப் போக்குவரத்து அமைச்சகத்தின் கீழ் இயங்கும் தன்னாட்சி பெற்ற அமைப்பாகும். இந்தியாவின் தற்போதைய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை துறை அமைச்சர் நிதின் கட்கரி ஆவார்.

34) தங்க நாற்கர சாலைகள் கீழ்க்கண்ட எந்த நான்கு பெரு நகரங்களை இணைக்கிறது?

A. புதுடில்லி, கர்நாடகா, மும்பை மற்றும் சென்னை

B. புதுடில்லி, கொல்கத்தா, சென்னை மற்றும் மும்பை

C. காஷ்மீர், புவனேஸ்வர், ஹைதராபாத் மற்றும் குஜராத்

D. ஸ்ரீநகர், கொல்கத்தா, பெங்களூரு மற்றும் மும்பை

விளக்கம்: B. புதுடில்லி, கொல்கத்தா, சென்னை மற்றும் மும்பை

இது 5846 கிலோ மீட்டர் நீளத்தையும் 4 முதல் 6 வழிகளை கொண்டதாகவும் உள்ளது. இது வடக்கு தெற்காக இந்தியாவின் 4 பெருநகரங்களை இணைக்கிறது. இத்திட்டம் 1999 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.

35) இந்தியாவின் பன்னாட்டு நெடுஞ்சாலைகள் ஆசிய மற்றும் பசுபிக் பகுதிகளுக்கான பொருளாதார மற்றும் சமூக ஆணையம் உடன்படிக்கையின் கீழ் எந்த வங்கியின் நிதி உதவியால் அமைக்கப்பட்டுள்ளது?

A. ஆசிய வளர்ச்சி வங்கி

B. ராயல் பாங்க் ஆஃப் கனடா

C. பிளன்பி பரிபாஸ்

D. உலக வங்கி

விளக்கம்: D. உலக வங்கி

இச்சாலைகள் பாகிஸ்தான், நேபாளம், பூடான், வங்காளதேசம் மற்றும் மியான்மர் ஆகிய அண்டை நாடுகளை இந்திய நெடுஞ்சாலைகள் உடன் இணைகிறது. கேரளாவில் சாலைகளின் அடர்த்தி மிக அதிகமாகவும் ஜம்மு காஷ்மீரில் மிகக் குறைவாகவும் உள்ளது.

36) சரியாக பொருந்தியுள்ளதை தேர்ந்தெடு.

a. வடக்கு ரயில்வே – புதுடெல்லி

b. வடமேற்கு ரயில்வே – ஜெய்ப்பூர்

c. வட மத்திய இரயில்வே – அலகாபாத்

d. வடகிழக்கு இரயில்வே – கௌகாத்தி

e. வடகிழக்கு எல்லை ரயில்வே – கோரக்பூர்

A. 1, 2 & 3
B. 2, 3 & 4
C. 3, 4 & 5
D. 2, 4 & 5

விளக்கம்: A. 1, 2 & 3

வடகிழக்கு இரயில்வே – கோரக்பூர்; வடகிழக்கு எல்லை ரயில்வே – கவுகாத்தி. இரயில்களின் இயக்கம் மற்றும் மேலாண்மைக்காக இந்திய ரயில்வே துறை 16 இரயில்வே மண்டலங்களாக பிரிக்கப்பட்டுள்ளது.

37) பொருத்துக.

a. மேற்கு மத்திய ரயில்வே – 1) மும்பை

b. மேற்கு ரயில்வே – 2) ஜபல்பூர்

c. கொங்கன் ரயில்வே – 3) ஹுப்ளி

d. தென்மேற்கு ரயில்வே – 4) நவி மும்பை

A. 1 4 3 2
B. 3 1 2 4
C. 2 1 4 3
D. 4 3 1 2

விளக்கம்: C. 2 1 4 3

38) எந்த ஆண்டு இந்தியாவில் ரயில்வே துறை ஆனது இந்தியன் ரயில்வே என்ற பெயருடன் தேசியமயமாக்கப்பட்டது?

A. 1945
B. 1948
C. 1950

D. 1952

விளக்கம்: D. 1952

இந்தியாவின் முதல் ரயில் போக்குவரத்து மும்பை மற்றும் தானே நகரங்களுக்கு இடையேயான 34 கிலோ மீட்டர் தூரத்திற்கு 1853 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இந்தியன் ரயில்வேயின் தலைமையகம் புதுடெல்லியில் அமைந்துள்ளது.

39) இந்தியாவின் மிக அதிவேக ரயிலான காத்திமன் எந்த இரண்டு நகரங்களை இணைக்கிறது?

A. புதுடெல்லி மற்றும் ஆக்ரா

B. ஸ்ரீநகர் மற்றும் புதுடெல்லி

C. ஆக்ரா மற்றும் குஜராத்

D. புதுடெல்லி மற்றும் கொல்கத்தா

விளக்கம்: A. புதுடெல்லி மற்றும் ஆக்ரா

இது மணிக்கு 160 கிலோ மீட்டர் வேகத்தில் பயணித்து மேற்கூறிய இரு நகரங்களுக்கு இடையேயான 200 கிலோ மீட்டர் தொலைவை 105 நிமிடங்களில் கடக்கிறது.

40) இந்தியாவின் முதல் புறநகர் ரயில் போக்குவரத்து எந்த நகரில் தொடங்கப்பட்டது?

A. டெல்லி

B. மும்பை

C. கொல்கத்தா

D. சென்னை

விளக்கம்: B. மும்பை

இது 1925 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. சென்னை நகரம் மெட்ரோ ரயில் சேவை கொண்ட ஆறாவது நகரமாகும்.

41) பொறியியல் துறையின் அதிசயமாக கருதப்படும் ரயில்வே பிரிவு எது?

A. தெற்கு ரயில்வே

B. கொங்கன் ரயில்வே

C. வடகிழக்கு இரயில்வே

D. மேற்கு மத்திய ரயில்வே

விளக்கம்: B. கொங்கன் ரயில்வே

ரயில்வே துறையின் முக்கிய சாதனைகளில் ஒன்றான கொங்கன் ரயில்வே 1998 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. இது மகாராஷ்டிராவில் உள்ள ரேகாவிற்கும் கர்நாடகாவில் உள்ள மங்களூருக்கும் இடைப்பட்ட 760 கிலோ மீட்டர் நீளத்தை இணைக்கிறது.

42) இந்தியாவில் உள்ள எத்தனை பெரு நகரங்களில் மெட்ரோ ரயில் சேவை வழங்கப்படுகிறது?

A. 4

B. 6
C. 7
D. 8
விளக்கம்: D. 8

அவை கொல்கத்தா, சென்னை, புதுடில்லி, பெங்களூர், குர்கயோன் ( ஹரியானா ), மும்பை, ஜெய்ப்பூர் மற்றும் கொச்சி. இந்தியாவில் இந்த ரயில்சேவை முதன்முதலில் கொல்கத்தாவில் தொடங்கப்பட்டது.

43) கீழ்க்கண்டவற்றுள் கிழக்கிந்திய கடற்கரையில் அமையாது துறைமுகம் எது?

1) காண்ட்லா 2) பாரதிப் 3) ஹால்தியா 4) நவ சேவா

A. 1 & 2
B. 2 & 3
C. 1 & 4
D. 3 & 4
விளக்கம்: C. 1 & 4

மேலும் கொல்கத்தா, விசாகப்பட்டினம், சென்னை, எண்ணூர் மற்றும் தூத்துக்குடி ஆகியவை கிழக்கிந்திய கடற்கரையில் அமைந்துள்ளது. மேற்கிந்திய கடற்கரையில் காண்ட்லா, மும்பை, நவ சேவா, மர்மகோவா, நியூ மங்களூரு மற்றும் கொச்சி ஆகிய இடங்களில் அமைந்துள்ளது.

44) பொருத்துக.

a) இந்துஸ்தான் கப்பல் கட்டும் தளம் – 1) கொச்சி

b) கார்டன் ரீச் கப்பல் கட்டும் தொழிற்சாலை – 2) மும்பை

c) மசா கான் கப்பல் கட்டும் தொழிற்சாலை – 3) விசாகப்பட்டினம்

d) கொச்சி கப்பல் கட்டும் தளம் – 4) கொல்கத்தா

A. 1 2 3 4
B. 2 1 4 3
C. 4 3 2 1
D. 3 4 2 1
விளக்கம்: D. 3 4 2 1

45) முதல் இந்திய விமான போக்குவரத்து எந்த ஆண்டு தொடங்கப்பட்டது?

A. 1918
B. 1926
C. 1930
D. 1942
விளக்கம்: A. 1918

இது 1918 ல் என்று ஹென்றி பிக்யூர் என்பவரால் அலகாபாத்தில் இருந்து நைனிக் என்ற இடத்திற்கு கடிதங்கள் கொண்டு செல்லப்பட்டதன் மூலம் ஆரம்பமானது. 1953 ஆம் ஆண்டு நாட்டில் செயல்பட்டு வந்த எட்டு பல்வேறு விமான நிறுவனங்கள் ஒன்றிணைக்கப்பட்டு அலைகள் தேசியமயமாக்கப்பட்டன.

46) இந்தியாவின் முதல் அஞ்சல் வில்லை வெளியிடப்பட்ட இடம் எது?

A. குஜராத்

B. கராச்சி

C. சண்டிகர்

D. பாட்னா

விளக்கம்: B. கராச்சி

இது 1852 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. 1975 இல் விரைவு அஞ்சல் சேவை அறிமுகம் செய்யப்பட்டது. 1972 இல் அறிமுகப்படுத்தப்பட்ட அஞ்சல் குறியீட்டு எண்ணை அடிப்படையாக கொண்டு விரைவு தபால் சேவை செயல்படுகிறது.

47) இந்தியாவின் செயற்கைக்கோள் தகவல் தொடர்பு அமைப்பு எத்தனை பிரிவுகளை கொண்டது?

A. 2

B. 3

C. 4

D. 6

விளக்கம்: A. 2

அவை 1. இந்திய தேசிய செயற் கைக்கோள் அமைப்பு ( INSAT )

2. இந்திய தொலையுணர்வு செயற்கைக்கோள் ( IRS )

48) இந்தியாவில் தகவல் தொடர்புக்காக ஏவப்பட்ட முதல் இன்சாட் வரிசை செயற்கைகோள் எது?

A. இன்சாட் 1A

B. இன்சாட் 2A

C. இன்சாட் 1B

D. இன்சாட் 2B

விளக்கம்: C. இன்சாட் 1B

இது ஆகஸ்ட் 30, 1983 ஆம் ஆண்டு ஏவப்பட்டது. டிசம்பர் 19, 2018 ஆம் ஆண்டு ஏவப்பட்ட ஜி சாட் 7 தகவல் தொடர்புக்காக சமீப காலத்தில் ஏவபட்ட ஒரு செயற்கைக்கோள் ஆகும்.

49) இணைய பயன்பாட்டாளர்கள் தரவரிசையில் இந்தியா எந்த இடத்தில் உள்ளது?

A. 1

B. 2

C. 4

D. 7

விளக்கம்: B. 2

இணைய பயன்பாட்டில் சீனா முதலிடத்தில் உள்ளது. இந்தியாவில் இணைய பயன்பாட்டாளர்கள் அதிகம் இருப்பினும் 2015 ஆம் ஆண்டின் படி 26% மக்கள் மட்டுமே இணைய வசதியைப் பெற்றவர்களாக உள்ளனர்.

50) கீழ்கண்டவற்றுள் மொத்த நாட்டு உற்பத்தியின் சமன்பாடு எது என கண்டறிக.

A. GMP = C – I + G + ( X – M ) + NFIA

B. GMP = C + I - G + ( X – M ) - NFIA

C. GMP = C – I + G + ( X – M ) - NFIA

D. GMP = C + I + G + ( X – M ) + NFIA

விளக்கம்: D. GMP = C + I + G + ( X – M ) + NFIA

C – நுகர்வோர்; I – முதலீட்டாளர் ; G - அரசு செலவுகள் ; X – M = ஏற்றுமதி – இறக்குமதி ; NFIA - வெளிநாட்டிலிருந்து ஈட்டப்பட்ட நிகர வருமானம்.

51) முதன்முதலாக தனிநபர் வருமானத்தை பற்றி கூறியவர் யார்?

A. தாதாபாய் நவரோஜி

B. V K R V ராவ்

C. அமர்த்தியா சென்

D. C. ராகவாச்சாரியா

விளக்கம்: A. தாதாபாய் நவரோஜி

1867 – 68 ல் முதன் முதலாக தாதாபாய் நவுரோஜி தனது "இந்தியாவின் வறுமை மற்றும் ஒரு பிரிட்டிஷ்யில்லா ஆட்சி" என்ற புத்தகத்தின் தனிநபர் வருமானத்தை பற்றி முதன்முதலாக கூறியுள்ளார்.

52) கீழ்கண்ட சமன்பாடு எதைக் குறிக்கிறது?

DPI = தனிப்பட்ட வருமானம் - நேர்முக வரி

A.நாட்டு வருமானம்

B. செலவிட தகுதியான வருமானம்

C. நிகர நாட்டு உற்பத்தி

D. மொத்த உள்நாட்டு உற்பத்தி

விளக்கம்: B. செலவிட தகுதியான வருமானம்

தனிநபர்கள் மற்றும் குடும்பங்களில் உண்மையான வருமானத்தில் நுகர்வுக்கு செலவிடப்படுகின்றன வருமானத்தை செலவிட தகுதியான வருமானம் என அழைக்கப்படுகிறது. நுகர்வு முறையில் DI = நுகர்வு செலவு + சேமிப்பு

53) இந்தியாவின் நிதியாண்டில் ஜிடிபி மதிப்பீட்டில் Q3 கால மாதங்கள் எவை எவை?

A. ஜனவரி, பிப்ரவரி, மார்ச்

B. ஏப்ரல், மே, ஜூன்

C. ஜூலை, ஆகஸ்ட், செப்டம்பர்

D. அக்டோபர், நவம்பர், டிசம்பர்

விளக்கம்: D. அக்டோபர், நவம்பர், டிசம்பர்

இந்தியாவின் நிதியாண்டை நான்கு காலாண்டுகளாக பிரித்து GDP மதிப்பிடப்படுகிறது.

முதல் காலாண்டு Q1 = ஏப்ரல், மே, ஜூன்

இரண்டாம் காலாண்டு Q2 = ஜூலை, ஆகஸ்ட், செப்டம்பர்

மூன்றாம் காலாண்டு Q3 = அக்டோபர், நவம்பர், டிசம்பர்

நான்காம் காலாண்டு Q4 = ஜனவரி, பிப்ரவரி, மார்ச்

54) கீழ்க்கண்ட சமன்பாடு எந்த மொத்த உள்நாட்டு உற்பத்தி கணக்கீட்டு முறையை குறிக்கிறது? Y = C + I + G + ( X – M )

A. வருமான முறை

B. மதிப்புக்கூட்டு முறை

C. செலவின முறை

D. எதுவும் இல்லை

விளக்கம்: C. செலவின முறை

இந்த முறையில் மொத்த உள்நாட்டு உற்பத்தியை ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஒரு நாட்டில் உற்பத்தி செய்த அனைத்து இறுதி பண்ட பணிகளை மேற்கொள்ளும் செலவுகளின் கூட்டுத் தொகையை குறிக்கும்.

55) கீழ்க்கண்டவற்றுள் எது/எவை மொத்த உள்நாட்டு உற்பத்தியின் முக்கியத்துவம் ஆக உள்ளது?

1) வாங்கும் திறன் மதிப்பீடு செய்வதற்கு உதவுகிறது.

2) பொருளாதார திட்டமிட வழிகாட்டியாகவும் பயன்படுகிறது.

3) உலகின் வளர்ந்த நாடுகளுடன் ஒப்பீடு செய்வதற்கு பயன்படுகிறது.

A. 1 & 2
B. 2 & 3
C. 1 & 3
D. அனைத்தும்

விளக்கம்: D. அனைத்தும்

56) இந்தியாவில் ஜிடிபி மதிப்பீடு எந்த அமைப்பால் வெளியிடப்படுகிறது?

A. மத்திய புள்ளியியல் அமைப்பு

B. நிதி ஆயோக்

C. மத்திய நிதியமைச்சகம்

D. மத்திய பொது துறை அமைச்சகம்

விளக்கம்: A. மத்திய புள்ளியல் அமைப்பு

புள்ளியல் துறை அமைச்சகத்தின் கீழே உள்ள மத்திய புள்ளியியல் அமைப்பு, ஜிடிபி சம்பந்தப்பட்ட ஆவணங்களை பாதுகாக்கிறது. தொழில் துறையின் உற்பத்தியை ஆண்டு கணக்கெடுப்பு நடத்தி தொழில்துறை உற்பத்தி குறியீடு, நுகர்வோர் விலைக் குறியீடு போன்ற குறியீடுகளை வெளியிடுகிறது.

57) கீழ்க்கண்டவற்றுள் முதன்மை துறை அல்லாதது எது?

A. நிலக்கரி உற்பத்தி

B. காடுகள் வளர்த்தல்

C. சர்க்கரை உற்பத்தி

D. மீன் பிடித்தல்

விளக்கம்: C. சர்க்கரை உற்பத்தி

வேளாண் துறையை முதன்மைத் துறை எனவும் அழைக்கலாம். இதில் வேளாண் சார்ந்த நடவடிக்கைகள் மற்றும் விவசாய நடவடிக்கைகள் அடங்கும். இவை கால்நடை பண்ணைகள், சுரங்கங்கள், சோளம் போன்ற மூலப் பொருட்களை உற்பத்தி செய்கிறது.

58) அறிவியல் ஆராய்ச்சி மற்றும் போக்குவரத்து எந்த துறையை சார்ந்தது?

A. முதன்மைத் துறை

B. இரண்டாம் துறை

C. மூன்றாம் துறை

D. எதுவும் இல்லை

விளக்கம்: C. மூன்றாம் துறை

பணிகள் துறையை மூன்றாம் துறை எனவும் அழைக்கலாம். அவைகள் அரசு, தகவல் தொடர்பு, வர்த்தகம், தபால் மற்றும் தந்தி, வங்கி, கல்வி, பொழுதுபோக்கு, சுகாதாரம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் போன்றவைகளாகும்.

59) விவசாய பண்டங்களின் உற்பத்தியில் இந்தியா ____ இடத்தில் உள்ளது?

A. 1

B. 2

C. 4

D. 6

விளக்கம்: B. 2

உலகின் மொத்த விவசாய பொருட்களின் வெளியீட்டில் 7.39 % இந்தியாவினால் உற்பத்தி செய்யப்படுகிறது.

60) உலகில் இந்தியா தொழில் துறையில் ____ இடத்திலும், பணிகள் துறையில் ____ இடத்திலும் உள்ளது.

A. 8, 6

B. 6, 8

C. 4, 6

D. 6, 4

விளக்கம்: A. 8, 6

இந்திய பொருளாதாரத்தில் விவசாயத் துறையின் பங்களிப்பு, உலக சராசரி 6.4% ஐ விட அதிகமாக உள்ளது. ஆனால் தொழில் துறை மற்றும் பணிகள் துறையின் பங்களிப்பு, உலக சராசரியை விட 30% தொழில் துறையிலும் மற்றும் 63% பணிகள் துறையிலும் குறைவாக உள்ளது.

61) 2018- 19 ஆம் ஆண்டு இந்தியாவின் மொத்த மதிப்பு கூடுதல் மதிப்பில் பணிகள் துறையின் வீதம் எவ்வளவு?

A. 15.87%
B. 29.74%
C. 36.51%
D. 54.40%

விளக்கம்: D. 54.40%

மேலும் மொத்த மதிப்பு கூடுதலான ரூ. 50.43 லட்சம் கோடியில் தொழில் துறையின் பங்களிப்பு 29.74 சதவீதமும் வேளாண்மை சார்ந்த சார்பு துறையின் பங்கு 15.87 சதவீதமும் ஆகும்.

62) நாட்டின் ஜிடிபி ல் கீழ்கண்ட எந்த துறை அதிக பங்களிப்பை அளிக்கிறது?

A. தொழில்துறை

B. நிதி, ரியல் எஸ்டேட்

C. பொது நிர்வாகம் மற்றும் பாதுகாப்பு

D. கட்டுமானம்

விளக்கம்: A. தொழில்துறை

தொழில்துறை 29.73%, சுரங்கம் மற்றும் குவாரி – 2.7%, நிதி மற்றும் ரியல் எஸ்டேட் – 20.96%, பொது நிர்வாக மற்றும் பாதுகாப்பு – 14.82%, கட்டுமானம் – 7.54%, விவசாயம், காடுகள் மற்றும் மீன்பிடித்தல் – 15.87%, வர்த்தகம், ஹோட்டல்கள், போக்குவரத்து, தகவல் தொடர்பு மற்றும் ஒளிபரப்பு – 18.62%.

63) கீழ்கண்ட கூற்றுகள் எவற்றை குறிப்பிடுகிறது?

1) இது ஒரு அளவின் இயல்பு

2) இது ஒரு குறிப்பிட்ட காலம் மட்டுமே உடையது.

A. பொருளாதார முன்னேற்றம்

B. பொருளாதார வளர்ச்சி

C. இரண்டும்

D. எதுவும் இல்லை

விளக்கம்: B. பொருளாதார வளர்ச்சி

பொருளாதார வளர்ச்சி ஒரு குறுகிய கருத்து. இது ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஒரு பொருளாதார வெளியீட்டில் நேர்மறை அளவு மாற்றத்தை கொடுக்கும்.

64) கீழ்க்கண்டவற்றுள் பொருளாதார முன்னேற்றம் பற்றிய சரியான கூற்றை தேர்ந்தெடு.

1) இது அரசாங்க தலையீட்டை மிகவும் நம்பியுள்ளது.

2) பொருளாதார முன்னேற்றம் ஒரு பரந்த கருத்து மற்றும் தொடர்ச்சியான செயல்முறை ஆகும்.

A. 1 மட்டும்

B. 2 மட்டும்

C. இரண்டும்

D. எதுவும் இல்லை

விளக்கம்: C. இரண்டும்

பொருளாதார முன்னேற்றம் ஒரு சமநிலையில் கவனம் செலுத்துகிறது. அனைத்து தனி நபர்கள் இடையே செல்வத்தைச் சமமாக விநியோகிப்பது மேலும் சமூகங்களை மேம்படுத்துவதற்கு முயற்சிக்கிறது. வாழ்க்கை எதிர்பார்ப்பு விகிதம், குழந்தை எழுத்தறிவு விகிதம் மற்றும் வறுமை விகிதத்தில் முன்னேற்றம் போன்றவற்றை நோக்கமாக கொண்டது.

65) இந்தியாவில் எத்தனை ஆண்டுகளில் தனிநபர் வருமானம் இரண்டு மடங்காக உயர்ந்துள்ளது?

A. 6

B. 12

C. 18

D. 20

விளக்கம்: B. 12

இந்தியா தனிநபர் வருமானத்தில் நடுத்தர வருவாய் நாடுகளின் பிரிவில் இடம் பிடித்துள்ளது.

66) இந்தியாவில் 5 வயதுக்குட்பட்ட எத்தனை சதவீத குழந்தைகள் ஊட்டச்சத்து குறைபாடுடன் உள்ளனர்?

A. 28%

B. 32%

C. 44%

D. 48 %

விளக்கம்: C. 44%

67) இந்தியாவில் 15 வயதும் அதற்கு மேலும் உள்ள மக்கள் தொகையில் எத்தனை சதவீதம் பேர் கல்வியறிவு பெற்றவர்களாக உள்ளனர்?

A. 18%

B. 63%

C. 51%

D. 34%

விளக்கம்: 63%

இது ஒப்பீட்டளவில் குறைந்த நடுத்தர வருவாய் நாடுகளில் 71% ஆகும்.

68) இந்தியாவில் மக்கள்தொகை மாற்றத்தில், கடந்த இரண்டு சகாப்தங்களாக உழைக்கும் பொதுமக்களின் பங்கு _____ லிருந்து _____ ஆக உயர்ந்துள்ளது.

A. 44% - 48%
B. 48% - 52%
C. 52% - 58%
D. 58% - 64%

விளக்கம்: 58% - 64%

இந்தியாவில் 35 வயதிற்கு உட்பட்ட உழைக்கும் வயதில் வேகமாக வளரும் மக்கள் தொகையில் 700 மில்லியன் பேர் உள்ளனர். அடுத்த 20 ஆண்டுகளில் இந்தியாவின் வளர்ச்சிக்கான மக்கள் தொகை குறைவாக உள்ளது.

69) மனித மேம்பாட்டு குறியீடு என்பது 1990 ஆம் ஆண்டு முகஹப்-உல் ஹிக் என்ற எந்த நாட்டு பொருளியல் அறிஞரால் அறிமுகப்படுத்தப்பட்டது?

A. பாகிஸ்தான்

B. ஆப்கானிஸ்தான்

C. தென் ஆப்பிரிக்கா

D. சீனா

விளக்கம்: A. பாகிஸ்தான்

பிறப்பின்போது வாழ்நாள் எதிர்பார்ப்பு, வயது வந்தோரின் கல்வியறிவு மற்றும் வாழ்க்கை தரம், ஜிடிபியின் மடக்கை செயல்பாடு என கணக்கிடப்பட்டு வாங்கும் சக்தி சமநிலைக்கு சரி செய்யப்படுகிறது.

70) மனித வளர்ச்சி மதிப்பீடுகளில் இந்தியா 189 நாடுகளில் எந்த இடத்திற்கு உயர்ந்துள்ளது?

A. 112
B. 118
C. 124
D. 130

விளக்கம்: D. 130

இந்தியாவில் 2017 இல் HDI யின் மதிப்பு 0.640 இது நாட்டை நடுத்தர மனித மேம்பாட்டு பிரிவின் கீழ் இடம் பெற வைக்கிறது. 1990 – 2017 க்கு இடைப்பட்ட காலத்தில் இந்தியாவின் HDI ன் மதிப்பு 0.427 லிருந்து 0.640 ஆக உயர்ந்தது.

71) மொத்த தேசிய மகிழ்ச்சி என்பது எந்த நாட்டின் அரசாங்கத்தை வழிநடத்தும் ஒரு தத்துவம் ஆகும்?

A. நேபாளம்

B. இலங்கை

C. பூட்டான்

D. ரஷ்யா

விளக்கம்: C. பூட்டான்

இது ஒரு மக்கள் தொகை கூட்டு மகிழ்ச்சி மற்றும் நல்வாழ்வை அளவிடப் பயன்படும் குறியீட்டை உள்ளடக்கியது.

72) ஐக்கிய நாடுகள் சபை " வளர்ச்சிக்கான ஒரு முழுமையான அணுகுமுறைக்கு – மகிழ்ச்சி" என்ற தீர்மானத்தை நிறைவேற்றிய ஆண்டு ____.

A. 2005
B. 2009
C. 2011
D. 2015

விளக்கம்: C. 2011

உறுப்பு நாடுகள் பூட்டானை ஒரு எடுத்துக்காட்டாக பின்பற்றி மகிழ்ச்சியையும், நல் வலியையும் மகிழ்ச்சி என அழைத்தனர். மொத்த தேசிய மகிழ்ச்சி என்ற வார்த்தையை 1972 ல் உருவாக்கியவர் ஜிகமே சிங்கயே வாங்ஹுக் என்ற பூட்டான் அரசர் ஆவார்.

73) கீழ்கண்டவற்றுள் மொத்த தேசிய மகிழ்ச்சியின் தூண்களாக கருதப்படுவது எது/எவை?

1) நல்ல ஆட்சி 2) சுற்றுச்சூழல் பாதுகாப்பு 3) கலாச்சாரத்தை பாதுகாப்பதும், மேம்படுத்துவதும்

A. 1 மட்டும்

B. 2 மட்டும்

C. 3 மட்டும்

D. அனைத்தும்

விளக்கம்: D. அனைத்தும்

மேலும் 4. நிலையான மற்றும் சமமான சமூக பொருளாதார வளர்ச்சி ஆகிய நான்கும் மொத்த தேசிய மகிழ்ச்சியில் தூண்களாக கருதப்படுகிறது.

74) நிரந்தர சொத்துரிமை சட்டத்தை அறிமுகப்படுத்தியவர் யார்?

A. ரிப்பன் பிரபு

B. கர்சன் பிரபு

C. காரன்வாலிஸ் பிரபு

D. வெல்லெஸ்லி பிரபு

விளக்கம்: C. காரன்வாலிஸ் பிரபு

1793 ல் அறிமுகப்படுத்தப்பட்டது. இம்முறையில் நிலச்சுவான்தார்ககளும், ஜமீன்தார்களும் நிலத்தின் சொந்தக்காரர்களாக அறிவிக்கப்பட்டு நில வருவாய் அரசுக்கு செலுத்த வேண்டிய முழுப் பொறுப்பும் அவர்களிடமே வழங்கப்பட்டது.

75) ரயத்துவாரி முறை முதன் முதலில் எங்கு அறிமுகம் செய்யப்பட்டது?

A. ஆந்திரப் பிரதேசம்

B. மத்திய பிரதேசம்

C. தமிழ்நாடு

D. மகாராஷ்டிரம்

விளக்கம்: C. தமிழ்நாடு

இம்முறையில் நிலத்தை சொந்தம் கொண்டாடும் உரிமை மற்றும் நிலத்திற்கான கட்டுப்பாடு நில உரிமையாளரிடமே இருந்தது. உரிமையாளர்களிடம் நேரடியான உறவு இருந்தது.

76) முதன் முதலில் நிறுவப்பட்ட பொதுத்துறை எஃகு நிறுவனம் எது?

A. விஸ்வேஸ்வரையா இரும்பு எஃகு நிறுவனம்

B. டிஸ்கோ

C. JJSCO

D. துர்காபூர் இரும்பு எஃகு நிறுவனம்

விளக்கம்: A. விஸ்வேஸ்வரையா இரும்பு எஃகு நிறுவனம்

இது கர்நாடக மாநிலம் பத்ராவதியில் அமைந்துள்ளது. 1907 ல் பெரிய அளவிலான இரும்பு எஃகு தொழிற்சாலை ஜாம்ஷெட்பூரிலும், அதனைத் தொடர்ந்து JJSCO தொழிற்சாலை 1919 ஆம் ஆண்டு பான்பூரிலும் தொடங்கப்பட்டன.

77) கீழ்கண்ட பொதுத்துறை எஃகு நிறுவனம் அமைந்துள்ள இடம் மற்றும் உதவி செய்யும் நாடுகளில் தவறாக பொருந்தியுள்ளதை தேர்ந்தெடு.

1) ரூர்கேலா - ஜெர்மனி

2) பிலாய் - ரஷ்யா

3) துர்காபூர் - இங்கிலாந்து

A. 1 & 2

B. 3

C. அனைத்தும்

D. எதுவும் இல்லை

விளக்கம்: D. எதுவும் இல்லை

சில எஃகு நிறுவனங்கள் மற்றும் அவை அமைந்துள்ள இடங்கள்:

ரூர்கேலா – ஒரிசா; பிலாய் - மத்திய பிரதேசம் ; துர்காபூர், பர்னபூர் - மேற்கு வங்காளம் ; பொகாரோ – ஜார்கண்ட்.

78) கீழ்க்கண்டவற்றுள் நாட்டுடமையாக்கப்பட்ட இரும்பு எஃகு நிறுவனம் எங்கு அமைந்துள்ளது?

A. பத்ராவதி

B. சேலம்

C. விசாகப்பட்டினம்

D. பர்னபூர்

விளக்கம்: A. பத்ராவதி

இது கர்நாடகாவில் அமைந்துள்ளது. நாட்டுடமையாக்கப்பட்ட விஸ்வேஸ்வரையா இரும்பு எஃகு நிறுவனம் மத்திய மற்றும் மாநில அரசுக்கு சொந்தமானது ஆகும்.

79) SAIL நிறுவனம் எந்த ஆண்டு நிறுவப்பட்டது?

A. 1972
B. 1974
C. 1976
D. 1978

விளக்கம்: B. 1974

எஃகு துறையை மேம்படுத்தும் பொறுப்பும் இதற்கு அளிக்கப்பட்டது. தற்போது, TIGCO தவிர மற்ற அனைத்து முக்கிய இரும்பு எஃகு நிறுவனங்கள் பொதுத் துறையின் கீழ் இயங்குகின்றன. இந்தியா எஃகு உற்பத்தியில் உலக அளவில் எட்டாவது இடத்தில் உள்ளது.

80) கீழ்க்கண்டவற்றுள் சரியானது தேர்ந்தெடு.

1) இந்தியா கச்சா சணல் உற்பத்தியிலும் சணல் பொருட்கள் தயாரிப்பிலும் முதலிடத்தில் உள்ளது.

2) சமையல் பொருட்கள் ஏற்றுமதியில் இரண்டாம் இடத்தில் உள்ளது.

A. 1
B. 2
C. 1 & 2
D. எதுவுமில்லை

விளக்கம்: C. 1 & 2

1835 ல் மேற்கு வங்காளத்தில் உள்ள ரேஷ்ரா என்னும் ஊரில் நவீன மயப்படுத்தப்பட்ட தொழிற்சாலை முதன்முறையாக உருவாக்கப்பட்டது.

81) இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் பருத்தி மற்றும் நெசவுத் தொழில் எத்தனை சதவீதத்தைக் கொண்டுள்ளது?

A. 2%
B. 4%
C. 5.5%
D. 7.2%

விளக்கம்: B. 4%

மதிப்பு கூட்டப்பட்ட உற்பத்தியில் 20% ம் ஏற்றுமதி வருவாயில் மூன்றில் ஒரு பங்கும் இத்துறையின் மூலம் கிடைக்கிறது.

82) இந்தியாவின் சர்க்கரை உற்பத்தியில் அதிக உற்பத்தியை கொண்டு உள்ள மாநிலம் எது?

A. மத்திய பிரதேசம்

B. உத்தரப் பிரதேசம்

C. ஆந்திர பிரதேசம்

D. மகாராஷ்டிரா

விளக்கம்: மகாராஷ்டிரா

இந்தியாவில் வேளாண்மை சார்ந்த தொழில்களில் பருத்தி தொழிலுக்கு அடுத்தபடியாக சர்க்கரை தொழில் உள்ளது. சர்க்கரை உற்பத்தியில் இந்திய அளவில் மூன்றில் ஒரு பங்கு அளவை மகாராஷ்டிர மாநிலம் உற்பத்தி செய்கிறது.

83) பட்டு தயாரிப்பில் இந்தியா _____ இடத்தில் உள்ளது.

A. 1

B. 2

C. 3

D. 4

விளக்கம்: B. 2

சீனா முதலிடத்தில் உள்ளது. தற்போது உலக அளவில் 16 சதவீத உற்பத்தியை இந்தியா கொண்டுள்ளது. மல்பெரி பட்டு, வெப்பமண்டல டெஸ்டர் பட்டு, ஒக் டஸ்ஸர், பட்டு ஏரி மற்றும் முகா பட்டு ஆகிய ஐந்து வகையான பட்டு துணிகளை இந்தியா உற்பத்தி செய்கிறது.

84) குறு உற்பத்தி நிறுவனங்களின் முதலீடு ____ க்கு மிகாமல் இருக்க வேண்டும்.

A. 10 லட்சம்

B. 15 லட்சம்

C. 10 லட்சம்

D. 25 லட்சம்

விளக்கம்: 25 லட்சம்

1. சிறுவர் உற்பத்தி நிறுவனங்களின் முதலீடு - 25 லட்சத்திற்கு அதிகமாகவும் ஐந்து கோடிக்கு மிகாமலும்

2. நடுத்தர உற்பத்தி நிறுவனங்களில் முதலீடு – 5 கோடிக்கு அதிகமாகவும் 10 கோடிக்கும் மிகாமலும் இருக்க வேண்டும்.

85) கீழ்க்கண்டவற்றுள் சரியாக பொருந்தி உள்ளதை தேர்ந்தெடு.

1. குறு சேவை நிறுவனத்தின் முதலீடு - 10 லட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்

2. சிறு சேவை நிறுவனத்தின் முதலீடு - 10 லட்சத்திற்கு அதிகமாகும் 2 கோடிக்கு மிகாமலும் இருக்க வேண்டும்.

3. நடுத்தர சேவை நிறுவனத்தின் முதலீடு – 2 கோடிக்கு அதிகமாகவும் ஐந்து கோடிக்கு மிகாமலும் இருக்க வேண்டும்.

A. 1 & 2
B. 2 & 3
C. 1 & 3
D. அனைத்தும்

விளக்கம்: D. அனைத்தும்

86) முதன்முதலில் எந்த ஆண்டு வங்கிகள் தேசிய மயமாக்கப்பட்டன?

A. 1950
B. 1957
C. 1963
D. 1969

விளக்கம்: D. 1969

தனியார் வணிக வங்கிகள் அரசாங்க திட்டமிடலுக்கான சமூக இலக்குகளை அடைய உதவி செய்ய தவறியதால், அரசு 14 பெரிய வணிக வங்கிகளை ஜூலை 19, 1969 ஆம் ஆண்டு தேசிய மயமாக்க முடிவு செய்தது. 1980 ஆம் ஆண்டில் அரசு மேலும் 6 வணிக வங்கிகளை தேசிய மயமாக்கியது.

87) ஐந்தாண்டு திட்டங்கள் முறை ____ நாட்டின் அரசியலமைப்பிலிருந்து பெறப்பட்டது.

A. அமெரிக்கா
B. ரஷ்யா
C. இங்கிலாந்து
D. ஆஸ்திரேலியா

விளக்கம்: B. ரஷ்யா

இதுவரை இந்தியா 12 ஐந்தாண்டு திட்டங்களை செயல்படுத்தி உள்ளது.12 ஆம் ஐந்தாண்டு திட்டமே ( 2012-2017 ) இறுதியான ஐந்தாண்டு திட்டம் என அறிவிக்கப்பட்டுள்ளது. அதற்கு பதிலாக நிதி ஆயோக் மூலமாக திட்டமிட முடிவு செய்துள்ளது.

88) ஹாரேட் டாமர் மாதிரியை அடிப்படையாகக் கொண்ட ஐந்தாண்டு திட்டம் எது?

A. முதல் ஐந்தாண்டு திட்டம்
B. இரண்டாவது ஐந்தாண்டு திட்டம்
C. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம்
D. ஐந்தாவது ஐந்தாண்டு திட்டம்

விளக்கம்: A. முதல் ஐந்தாண்டு திட்டம்

இது 1951 – 1956 ஆண்டு வரை செயல்படுத்தப்பட்டது. இதன் முதன்மை நோக்கம் நாட்டின் வேளாண்மை முன்னேற்றமாகும். இத்திட்டம் 3.6 % வளர்ச்சி வீதத்துடன் ( இலக்கை விட அதிகம் ) வெற்றி பெற்றது.

89) PC மஹலநோபிஸ் மாதிரியை அடிப்படையாகக் கொண்டு செயல்படுத்தப்பட்ட ஐந்தாண்டு திட்டம் எது?

A. மூன்றாம் ஐந்தாண்டு திட்டம்

B. இரண்டாம் ஐந்தாண்டு திட்டம்

C. ஆறாம் ஐந்தாண்டுத் திட்டம்

D. ஐந்தாவது ஐந்தாண்டு திட்டம்

விளக்கம்: இரண்டாம் ஐந்தாண்டு திட்டம்

இது 1956 – 1961 ஆம் ஆண்டு வரை செயல்படுத்தப்பட்டது. இதன் முதன்மையான நோக்கம் நாட்டின் தொழில் முன்னேற்றத்தை மேம்படுத்துவது ஆகும். இத்திட்டம் 4.1% வளர்ச்சி வீரத்துடன் வெற்றி பெற்றது.

90) இந்திய - சீனப் போரின் காரணமாக மூன்றாவது ஐந்தாண்டு திட்டத்தின் இலக்கான _____ % வளர்ச்சி வீதத்தை அடைய இயலவில்லை.

A. 4.8%

B. 5.2%

C. 5.6%

D. 5.8%

விளக்கம்: C. 5.6%

இது 1961 – 1966 ஆம் ஆண்டுவரை செயல்படுத்தப்பட்டது. இத்திட்டம் காட்கில் திட்டம் என்று அழைக்கப்பட்டது. இத்திட்டத்தின் நோக்கம் சுதந்திரமான பொருளாதாரம் மற்றும் சுயமுன்னேற்ற நிலையை ஏற்படுத்துதல் ஆகும்.

91) சூழல் திட்டம் செயல்படுத்தப்பட்ட ஆண்டு எது?

A. 1966-67

B. 1967-68

C. 1972-73

D. 1978-79

விளக்கம்: D. 1978 - 79

இச்சூழல் திட்டம் ஒரு வருட காலத்திற்கு செயல்படுத்தப்பட்டது. இத்திட்டம் 5 வது ஐந்தாண்டு திட்டத்தை நீக்கிய பிறகு தொடங்கியது.

92) ஐந்தாண்டு திட்டங்களில் திட்டமிடப்பட்ட 5 ஆண்டுகளில் ஓராண்டுக்கு முன்பே கைவிடப்பட்ட ஐந்தாண்டு திட்டம் எது?

A. நான்காம் ஐந்தாண்டு திட்டம்

B. ஐந்தாவது ஐந்தாண்டு திட்டம்

C. ஆறாவது ஐந்தாண்டு திட்டம்

D. எட்டாவது ஐந்தாண்டு திட்டம்

விளக்கம்: B. ஐந்தாவது ஐந்தாண்டு திட்டம்

இத்திட்டத்திற்கான முன்வரைவு D.P தார் அவர்களால் தயாரிக்கப்பட்டது. இது திட்டமிடப்பட்ட காலம் 1974-79 வரை. ஆனால் 1978 ஆம் ஆண்டு இத்திட்டம் கைவிடப்பட்டது.

93) கீழ்க்கண்ட ஐந்தாண்டு திட்டங்களில் நிர்ணயிக்கப்பட்ட வளர்ச்சி இலக்கை அடையாத ஐந்தாண்டு திட்டங்கள் எவை?

1. நான்காவது ஐந்தாண்டுத் திட்டம்
2. ஆறாவது ஐந்தாண்டுத் திட்டம்
3. ஒன்பதாவது ஐந்தாண்டு திட்டம்
4. 11வது ஐந்தாண்டு திட்டம்

A. 1, 2 & 3
B. 2, 3 & 4
C. 1, 3 & 4
D. அனைத்தும்

விளக்கம்: C. 1, 3 & 4

94) எந்த ஐந்தாண்டு திட்டம் அடுத்த 10 ஆண்டுகளில் தலா வருவாயை இரு மடங்காக உயர்த்த இலக்கு நிர்ணயித்தது?

A. ஏழாவது ஐந்தாண்டு திட்டம்

B. ஒன்பதாவது ஐந்தாண்டு திட்டம்

C. பத்தாவது ஐந்தாண்டு திட்டம்

D. 12வது ஐந்தாண்டு திட்டம்

விளக்கம்: C. பத்தாவது ஐந்தாண்டு திட்டம்

இது 2002-2007 ஆம் ஆண்டு செயல்படுத்தப்பட்டது. இத்திட்டம் 2012 ஆம் ஆண்டில் வறுமை விகிதத்தை 15 சதவீதமாக குறைக்கும் குறிக்கோளை கொண்டிருந்தது.

95) நிதி ஆயோக் ஏற்படுத்தப்பட்ட ஆண்டு எது?

A. ஜனவரி 1, 2015

B. ஜனவரி 1, 2016

C. மார்ச் 1, 2015

D. மார்ச் 1, 2016

விளக்கம்: A. ஜனவரி 1, 2015

திட்டக்குழு என்பதற்கு மாற்றாக நிதி ஆயோக் அமைப்பு ஏற்படுத்தப்பட்டது. இது நீடித்த நிலையான வளர்ச்சியை மேற்பார்வையிடவும், ஒருங்கிணைக்கவும் மற்றும் செயல்படுத்தவும் செயல்படும். நிதி ஆயோக்கின் தலைவர் பிரதமர் ஆவார்.

96) மனித மேம்பாட்டு குறியீட்டில்( HDI ) முதலிடத்தில் உள்ள நாடு எது?

A. ஸ்விட்சர்லாந்து

B. டென்மார்க்

C. ஆஸ்திரேலியா

D. நார்வே

விளக்கம்: D. நார்வே

மேலும் சுவிட்சர்லாந்து இரண்டாம் இடத்திலும் ஆஸ்திரேலியா மூன்றாம் இடத்திலும் உள்ளன. மேலும் இந்தியா உள்பட பல்வேறு நாடுகள் மனித மேம்பாலத்தை கணக்கிட தேவையான புள்ளிவிவரங்களை மேம்படுத்தவும் குறியீட்டை விரிவுபடுத்துவதற்கு தொடர்ச்சியான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன.

97) கீழ்கண்டவற்றுள் சரியான கூற்றை தேர்ந்தெடு.

1. மனிதவள மேம்பாட்டுக் குறியீடு பணம் மற்றும் உடல் சார்ந்த மேம்பாட்டை குறிக்கிறது.
2. வாழ்க்கை தர குறியீட்டு எண் உடல் சார்ந்த மேம்பாட்டை மட்டுமே குறிக்கிறது.

A. 1 மட்டும்

B. 2 மட்டும்

C. 1 & 2

D. எதுவும் இல்லை

விளக்கம்: C. 1 & 2

வாழ்க்கை தர குறியீட்டு என்னை D. மோரிஸ் என்பவர் உருவாக்கினார். இதற்காக இவர் எதிர்பார்ப்பு ஆயுட்காலம், குழந்தைகள் இறப்பு வீதம் மற்றும் எழுத்தறிவு வீதம் ஆகிய மூன்று குறியீடுகளை பயன்படுத்தினார்.

98) வாழ்க்கை தர குறியீட்டு எண்ணில் 100 என்ற மிகச் சிறப்பாக செயல்படும் இடத்தை 1973-ஆம் ஆண்டே அடைந்த நாடு எது?

A. கனடா

B. ஸ்வீடன்

C. டென்மார்க்

D. நார்வே

விளக்கம்: B. ஸ்வீடன்

100 என்பது 77 வருட ஆயுட்காலத்தை குறிக்கும். மேலும் 1 என்ற கீழ் எல்லையானது 28 வருட ஆயுளுக்கு வழங்கப்பட்டுள்ளது. இதனை கயானா- விசாவை நாடு 1960 ஆம் ஆண்டு பெற்றது.

99) ஐந்தாண்டு திட்டங்கள் துவங்கும் முன் மொத்த நாட்டு உற்பத்தியில் _____ சதவீதம் மட்டுமே கல்வியில் முதலீடு செய்யப்பட்டது.

A. 1.2%
B. 1.5%
C. 2.1%
D. 2.5%

விளக்கம்: A. 1.2%

ஆனால் தற்போது மொத்த நாட்டு உற்பத்தியில் கல்விக்கு 3.5% பொது முதலீடாக அதிகரித்துள்ளது.

100) பள்ளி சாரா மற்றும் வயது வந்தோர் கல்வி திட்டத்தின் கீழ் வயது வந்தோர் எனப்படுபவர் ____ வயதுக்குட்பட்டவர்கள் என வரையறுக்கப்பட்டனர்.

A. 10 – 20
B. 15 – 30
C. 15 – 35
D. 10 – 35

விளக்கம்: C. 15 - 35

இத்திட்டத்தின்கீழ் மொத்த கல்வியறிவு நடவடிக்கைகள், கல்வியறிவு பெற்ற பின் நடவடிக்கைகள், தொடர்கல்வி ஆகிய நடவடிக்கைகள் அரசால் அறிவொளி இயக்கத்தின் கீழ் செயல்படுத்தப்பட்டன.